நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வெங்காய ஏற்றுமதிக்கு தடை எதிரொலி: விலை சரிவு**

First Published : 11 Sep 2011 08:25:32 AM IST

புதுதில்லி, செப்.10 : வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய விதித்துள்ள தடை காரணமாக, வெங்காயத்தின் விலை சரிந்துள்ளது. தடையை நீக்க வலியுறுத்தி மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதன் காரணமாக,ஆசியாவின் மிகப் பெரிய பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான சந்தையான ஆசாத்பூரில் வெங்காயத்தின் விலை சரிந்தது. வெள்ளிக்கிழமை கிலோ ஒன்றுக்கு தரத்திற்கேற்ப ரூ. 8 முதல் 13 வரை விற்பனையான வெங்காயத்தின் விலை சனிக்கிழமை கிலோ ஒன்றுக்கு ரூ 7முதல் 12 வரை விற்பனையானது. ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாகவே விலை குறைந்ததாக ஆசாத்பூர் வெங்காய விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுரேந்திர புதி ராஜ் தெரிவித்தார்.

மொத்த விற்பனை விலையில் சரிவு ஏற்பட்டாலும், சில்லறை விலையில் எந்த மாற்றமும் உடனடியாக இருக்காது என வியாபாரிகள் தெரிவித்தனர். தில்லியில் 1 கிலோ வெங்காயத்தின் விலை ரூ.25 ஆக உள்ளது.

மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த வெங்காய விவசாயிகள் ஏற்றுமதிக்கான தடையை நீக்கக் கோரி போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால், திங்கள்கிழமை முதல் ஆசாத்பூர் சந்தைக்கு வரும் வெங்காயத்தின் வரவு குறைய வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெங்காய சந்தைக்கான முக்கிய கேந்திரமான நாசிக்கில் அனைத்து மண்டிகளும் 2வதாக நாளாக சனிக்கிழமையும் மூடப்பட்டிருந்தன. மன்மாட், கல்வான் உள்ளிட்ட மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள 15 முக்கிய வெங்காய மண்டிகளை தடையை நீக்கக் கோரி விவசாயிகள் புறக்கணித்தனர்.

வெங்காய ஏற்றுமதிக்கான தடையை விலக்கி கொள்ள வலியுறுத்தி, மகாராஷ்டிர அரசுக்கும், மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவாருக்கும் கோரிக்கை மனு ஒன்றை அளிக்க உள்ளதாக வெங்காய வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கர்நாடக மாநிலம் யஷ்வந்பூர் அருகே உள்ள சந்தைக்கு விவசாயிகள் வெங்காயத்தை விற்பனைக்கு கொண்டு வரவில்லை.

நாட்டில் உள்ள கிடங்குகளில் சுமார் 14 லட்சம் டன் வெங்காயம் கையிருப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நவம்பர் மாதம் 15ம் தேதி வரையிலான வெங்காயத்தின் தேவையை பூர்த்தி செய்ய இது போதுமானது என்றும் அவர்கள் தெரிவித்தனர். அக்டோபர் 15 ம் தேதி

வாக்கில், கரீப் பருவத்தில் விளைந்த புது வெங்காயம் சந்தைக்கு வரும் என்பதால் பிரச்னை எதுவும் இருக்காது எனவும் அவர்கள் கூறினர்.

**காங்கயத்தில் மானிய விலையில் நெல் விதைகள் விநியோகம்**

First Published : 11 Sep 2011 01:13:11 PM IST

காங்கயம், செப். 10 : நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் நெல் விதைகளை பெற்று பயன்பெறுமாறு காங்கயம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆர்.மாணிக்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்தது:

காங்கயம் வட்டாரத்தில் நத்தக்காடையூர், குட்டப்பாளையம், பழையகோட்டை, மருதுறை, மறவபாளையம், பரஞ்சேர்வழி பகுதிகளில், தற்போது நெல் சாகுபடிக்காக, தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. தற்போது காங்கயம் மற்றும் நத்தக்காடையூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் ஐ.ஆர்-203046 மற்றும் கோ-43 சான்று பெற்ற விதைகள், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், மேற்கண்ட வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி, மானிய விலையில் நெல் விதைகளை பெற்று பயன்பெறலாம்.

**வெங்காய ஏற்றுமதிக்கு தடை எதிரொலி: விலை சரிவு**

First Published : 11 Sep 2011 08:25:32 AM IST

புதுதில்லி, செப்.10 : வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய விதித்துள்ள தடை காரணமாக, வெங்காயத்தின் விலை சரிந்துள்ளது. தடையை நீக்க வலியுறுத்தி மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதன் காரணமாக,ஆசியாவின் மிகப் பெரிய பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான சந்தையான ஆசாத்பூரில் வெங்காயத்தின் விலை சரிந்தது. வெள்ளிக்கிழமை கிலோ ஒன்றுக்கு தரத்திற்கேற்ப ரூ. 8 முதல் 13 வரை விற்பனையான வெங்காயத்தின் விலை சனிக்கிழமை கிலோ ஒன்றுக்கு ரூ 7முதல் 12 வரை விற்பனையானது. ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாகவே விலை குறைந்ததாக ஆசாத்பூர் வெங்காய விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுரேந்திர புதி ராஜ் தெரிவித்தார்.

மொத்த விற்பனை விலையில் சரிவு ஏற்பட்டாலும், சில்லறை விலையில் எந்த மாற்றமும் உடனடியாக இருக்காது என வியாபாரிகள் தெரிவித்தனர். தில்லியில் 1 கிலோ வெங்காயத்தின் விலை ரூ.25 ஆக உள்ளது.

மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த வெங்காய விவசாயிகள் ஏற்றுமதிக்கான தடையை நீக்கக் கோரி போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால், திங்கள்கிழமை முதல் ஆசாத்பூர் சந்தைக்கு வரும் வெங்காயத்தின் வரவு குறைய வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெங்காய சந்தைக்கான முக்கிய கேந்திரமான நாசிக்கில் அனைத்து மண்டிகளும் 2வதாக நாளாக சனிக்கிழமையும் மூடப்பட்டிருந்தன. மன்மாட், கல்வான் உள்ளிட்ட மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள 15 முக்கிய வெங்காய மண்டிகளை தடையை நீக்கக் கோரி விவசாயிகள் புறக்கணித்தனர்.

வெங்காய ஏற்றுமதிக்கான தடையை விலக்கி கொள்ள வலியுறுத்தி, மகாராஷ்டிர அரசுக்கும், மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவாருக்கும் கோரிக்கை மனு ஒன்றை அளிக்க உள்ளதாக வெங்காய வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கர்நாடக மாநிலம் யஷ்வந்பூர் அருகே உள்ள சந்தைக்கு விவசாயிகள் வெங்காயத்தை விற்பனைக்கு கொண்டு வரவில்லை.

நாட்டில் உள்ள கிடங்குகளில் சுமார் 14 லட்சம் டன் வெங்காயம் கையிருப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நவம்பர் மாதம் 15ம் தேதி வரையிலான வெங்காயத்தின் தேவையை பூர்த்தி செய்ய இது போதுமானது என்றும் அவர்கள் தெரிவித்தனர். அக்டோபர் 15 ம் தேதி வாக்கில், கரீப் பருவத்தில் விளைந்த புது வெங்காயம் சந்தைக்கு வரும் என்பதால் பிரச்னை எதுவும் இருக்காது எனவும் அவர்கள் கூறினர்.

**"தமிழ்நாட்டில் விவசாயிகள் தற்கொலை இரண்டு மடங்காக அதிகரிப்பு'**

First Published : 11 Sep 2011 07:53:34 AM IST

சென்னை, செப். 10: தமிழ்நாட்டில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்ற அதிர்ச்சிகரமான தகவலை மகசேசே விருது பெற்ற பத்திரிகையாளர் பி. சாய்நாத் தெரிவித்தார்.

சினேகா அமைப்பின் வெள்ளி விழா ஆண்டு நிகழ்ச்சி சென்னையில் சனிக்கிழமை நடைபெற்றது. உலகத் தற்கொலை தடுப்பு நாள் நிகழ்வாகவும் நடந்த அந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சாய்நாத் பேசியதாவது:

தற்கொலை மரணம் என்பது உலகெங்கிலும் அதிகரித்து வருகிறது. படித்தவர்கள் அதிகம் நிறைந்த நார்வே, ஸ்காண்டிநேவியா போன்ற நாடுகளிலும் தற்கொலை சம்பவங்கள் அதிகமாக

உள்ளன. எனினும், எல்லா நாடுகளிலும் விளிம்பு நிலையில் வாழும் சமுதாயத்தில்தான் தற்கொலைகள் அதிகம் நிகழ்கின்றன.

இந்தியாவைப் பொருத்தவரை கடந்த பத்தாண்டுகளில் மக்கள் தொகை 18 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் தற்கொலை மரணங்களும் 15 சதவீதம் அதிகரித்துள்ளன. குறிப்பாக விவசாயிகள் தற்கொலை என்பது மிகப்பெரும் எண்ணிக்கையில் உள்ளது.

கடந்த 1997-ம் ஆண்டிலிருந்து நம் நாட்டில் 2 லட்சத்து 41 ஆயிரத்து 600 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். முதல் 6 ஆண்டுகளில் ஒரு ஆண்டில் விவசாயிகளின் சராசரி தற்கொலை என்பது 16 ஆயிரத்து 267 ஆக இருந்தது. அதுவே, 2004-ல் இருந்து அடுத்த 6 ஆண்டுகளில் 17 ஆயிரத்து 105 ஆக அதிகரித்து விட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நாட்டிலேயே விவசாயிகளுக்கு அதிக வசதிகள் செய்து கொடுக்கப்படும் மாநிலம் என்றும், முன்னோடியான விவசாய மாநிலங்களில் ஒன்று என்றும் கூறப்படுகிறது. ஆனால், இங்கேயே 2008-ம் ஆண்டோடு ஒப்பிடும்போது விவசாயிகளின் தற்கொலை என்பது இரண்டு மடங்காக அதிகரித்துள்ள அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகி உள்ளன.

2008-ம் ஆண்டு தமிழ்நாட்டில் சுமார் 500 ஆக இருந்த விவசாயிகளின் தற்கொலை மரணம், அடுத்த ஆண்டிலேயே இரண்டு மடங்கு அதிகரித்து 1,260 ஆக உயர்ந்ததாக மத்திய உள்துறை அமைச்சகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில் விவசாயிகளின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுவதும், விவசாயத் தொழிலில் ஈடுபட பெரும் பணக்கார நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படுவதும், விவசாயத் துறை விவசாயிகளிடமிருந்து அந்நியமாக்கப்பட்டு, முழுமையாக வர்த்தகத் துறையாக மாற்றும் முயற்சிகளே விவசாயிகளின் தற்கொலைகள் அதிகரிக்கக் காரணங்களாக உள்ளன.

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகளின் விவசாயக் கொள்கைகள் மாற்றம் பெறாத வரை, இதுபோன்ற விவசாயிகளின் தற்கொலை மரணங்களையும் தடுக்க முடியாது. குறிப்பாக வேளாண்மை விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான தேசிய விவசாயிகள் ஆணையம் அளித்த பரிந்துரைகளை அமல்படுத்த மத்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும் என்றார் சாய்நாத்.

நிகழ்ச்சியில் சினேகா அமைப்பின் வெள்ளி விழா ஆண்டு சிறப்பு மலரை வெளியிட்டு மேற்குவங்க மாநில முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி பேசினார்.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு கடைசி நொடிகளில் மீட்கப்பட்ட பலர் மீது தற்கொலை முயற்சிக்கான வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. தற்கொலையிலிருந்து மீண்டவர்களுக்கு வாழ்க்கை குறித்த நம்பிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். மாறாக, அவர்கள் மீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்து, தண்டிப்பது என்பது பொருத்தமானதாகத் தெரியவில்லை. அவ்வாறு

தண்டிக்க வகை செய்யும் சட்டப் பிரிவு பல நாடுகளில் நீக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார் காந்தி.

முன்னதாக சினேகா அமைப்பின் தலைவர் நல்லி குப்புசாமி வரவேற்றுப் பேசினார். சினேகா அமைப்பின் 25 ஆண்டு கால பணிகள் குறித்து அதன் நிறுவனர்களில் ஒருவரான டாக்டர் லட்சுமி விஜயகுமார் பேசினார். அமைப்பின் இயக்குநர் காயத்ரி நன்றி கூறினார்.

தினமலர்

**விதை உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,00:46 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்ட விதை சான்று துறை சார்பில் விதைகள் தரம் பாதுகாப்பது தொடர்பான தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப புத்தூட்ட பயிற்சிமுகாம் கோவில்பட்டியில் நடந்தது. பயிற்சிக்கு தூத்துக்குடி மாவட்ட விதை சான்று உதவி இயக்குனர் பிரமநாயகம் தலைமை வகித்து விதைகளே விளைச்சலுக்கு ஆதாரம் என்ற தலைப்பில் பேசினார். பின்னர் நடப்பு ஆண்டு தரமான விதைகளை உற்பத்திசெய்து விவசாயிகளுக்கு வழங்குவோம் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது. அதைதொடர்ந்து விதை சான்றுநடைமுறைகள், விதைப் பண்ணை பதிவுகள்,வயலாய்வு குறித்து தொழில்நுட்ப விதைசான்று அலுவலர் ஊமைத்துரை பேசினார். விதைசட்டம் மற்றும் விதைகட்டுப்பாடு ஆணைகள் குறித்து கோவில்பட்டி விதை ஆய்வாளர் மதியழகன் பேசினார். தூத்துக்குடி மாவட்டத்தில் விதை பரிசோதனை நிலையம் தோற்றுவிக்கப்பட்ட விவரம், தரமான விதை உற்பத்திக்கான விதை பரிசோதனை விவரங்கள், பகுப்பாய்வு விவரங்கள் குறித்து விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் நெடுஞ்செழியன் பேசினார்.பயிற்சியில் நெல்,சிறுதானியங்கள், பயறு, பருத்தி, எண்ணெய்வித்துக்கள் மற்றும் காய்கறிவிதைகள் உற்பத்தி செய்யக்கூடிய தூத்துக்குடி மாவட்ட தனியார் விதை உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை கோவில்பட்டி விதை சான்று அலுவலர் நாகராஜ் செய்திருந்தார்.

**ஆத்தூரில் மஞ்சள் ஏலம்ரூ.53 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,01:23 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 2,012 மூட்டை மஞ்சள், 53 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.கடந்த 4ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில், வியாபாரிகள் மஞ்சள் விலையை நிர்ணயம் செய்தும், விரலி மற்றும் உருண்டை மஞ்சள் கலந்திருப்பதாக தெரிவித்து ஏலத்தை புறக்கணித்து, மஞ்சள் மூட்டைகளை எடுத்துச் செல்லாமல் சென்றதால், மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது.நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, விவசாயிகள் விளைவித்த, 2,012 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,789 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 5,888 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,099 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,549 ரூபாய்க்கும் விற்பனையானது.விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 307 ரூபாயும், உருண்டை மஞ்சள், 980 ரூபாயும் விலை குறைந்துள்ளது. 2,012 மஞ்சள் மூட்டை, 53.50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**ஆத்தூரில் பருத்தி ஏலம்ரூ.10 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,01:22 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 900 மூட்டை பருத்தி, 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த ஏலத்துக்கு, ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் விளைவித்த பருத்தி மூட்டையை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.
ஏலத்தில், டி.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,800 ரூபாயும், அதிகபட்சமாக, 4,509 ரூபாயும், பி.டி., ரக பருத்தி குறைந்தபட்சமாக, 3,819 ரூபாயும், அதிகபட்சமாக, 4,609 ரூபாய்க்கும், கொட்டு பருத்தி குவிண்டால் குறைந்த பட்சமாக, 1,619 ரூபாயும், அதிகபட்சமாக, 2,409 ரூபாய்க்கும் விற்பனையானது.
ஏலத்தில், 900 மூட்டை பருத்தி, 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**சொட்டு நீர் பராமரிப்பு செயல்விளக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,03:43 IST

ராசிபுரம்:ராசிபுரம் அருகே காரியாம்பட்டியில், ஸ்வேதா பாசன பரப்பு பகுதி விவசாயிகளுக்கான துல்லியப் பண்ணை சொட்டு நீர் பராமாரிப்பு பயிற்சி நடந்தது.
நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன், விஜயகுமார் வரவேற்றனர். வேளாண் அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் மாணிக்கம், சொட்டு நீரின் பராமரிப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.கோவை வேளாண் பல்கலை நீர் நுட்ப மைய இயக்குநர் பேராசிரியர் செல்லமுத்து பங்கேற்று, சொட்டுநீர் பைப்பில் உப்புக் கட்டுதலை தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து விளக்கிப் பேசினார். மேலும், குழாய்களில் உப்பு கட்டுதலை எடுக்க செய்ய வேண்டிய அமிலமுறை நேர்த்தி பற்றியும், நேரடி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.காரியாம்பட்டி சுற்றுவட்டாரத்தை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, வேளாண் அலுவலர்கள் அருள்ராணி, கிரிஜா, லோகமணி ஆகியோர் செய்திருந்தனர்.

**முருங்கை வரத்து குறைவுவிலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,04:14 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவிலில் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் வாரச்சந்தையில் முருங்கை விற்பனை கனஜோராக நடந்தது.
நேற்று காலை 5 மணிக்கு விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைவித்த முருங்கை காய்களை விற்பனைக்காக வெள்ளகோவில் சந்தைக்கு கொண்டு வந்தனர் நேற்று முருங்கை சற்று குறைவாக வரத்து இருந்ததால் நேற்று விலை கடந்த வாரத்தை விட சற்று அதிகமாக விற்றதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.
25 காய் கொண்ட மரமுருங்கை 30 ரூபாய்க்கும், 25 காய் கொண்ட செடி முருங்கை கட்டு 40 ரூபாய்க்கும் விற்றது. மரமுருங்கை 600 காய் கொண்ட மூடை ஒன்று 650 முதல் 750 ரூபாய் வரை விற்றது. செடி முருங்கை மூடை ஒன்று 950 ரூபாய் வரை விற்றது. நேற்று முன்தினம் ஒட்டன்சத்திரம் மார்கெட்டில் ஒரு கிலோ மரமுருங்கை 10 ரூபாய்க்கும், செடிமுருங்கை ஒரு கிலோ 14 ரூபாய் வரை விற்றது.

**வரத்து அதிகரிப்பால் காலிஃப்ளவர் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,04:03 IST

ஈரோடு:நல்ல மழையால் காலிஃப்ளவர் விளைச்சல் அமோகமாகி ஒரு பூ 10 ரூபாய்க்கு விற்பனையாகிறது.தமிழகத்தில் வெப்பநிலை குறைவாக மலை பகுதிகளில் காலிஃப்ளவர் விளைவிக்கப்படுகிறது. ஊட்டி, மேட்டுபாளையம், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, ஓசூர், பெங்களூரு, ஈரோடு மாவட்டம் அந்தியூர், பர்கூர் ஆகிய பகுதியில் அதிகளவு காலிஃப்ளவர் சாகுபடி செய்யப்படுகிறது.முதலில் சீஸனுக்கு ஏற்ப வரத்து அதிகமாகியது. தற்போது ஆண்டு முழுவதும் காலிஃப்ளவர் சீஸன் உள்ளதால், ஈரோடுக்கு நேதாஜி பெரிய மார்க்கெட், சின்ன மார்க்கெட் பகுதிகளிலும், நகர பகுதிக்கும் விவசாயிகள் காலிஃப்ளவரை டெம்போவில் கொண்டு வந்து விற்கின்றனர்.ஹோட்டல்களில் செய்யும் காளிஃப்ளவர் சில்லி, கிரேவியில், அசைவ உணவுகளை போல அதிக சுவை உள்ளதால், அனைத்து தரப்பு மக்களும் விரும்பி வாங்குகின்றனர்.

பொதுமக்கள் வீட்டுக்கு அதிகளவு வாங்கி செல்கின்றனர்.விளைச்சல், வரத்து மற்றும் விற்பனை அதிகரிப்பால் காலிஃப்ளவர் 20 முதல் 25 ரூபாய்க்கு விற்றது, தற்போது, 10 ரூபாய் குறைந்தும், பெரிய பூ 10 முதல் 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது.காலிஃப்ளவர் வியாபாரி கிட்டு கூறியதாவது:ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலங்களில் காலிஃப்ளவர் சீஸன் துவங்கும். பெரும்பாலும் வெப்பநிலை குறைந்த பகுதியில் ஆண்டு முழுவதும் விளைச்சலாகும். நடப்பு ஆண்டு மலை பகுதிகளில் நல்ல மழை காரணமாக விளைச்சல் இருமடங்கு அதிகரித்துள்ளது.பெங்களூரு, ஊட்டி, மேட்டுபாளையம், ஓசூர், தேன்கனிக்கோட்டை, அந்தியூர், பர்கூர் ஆகிய பகுதியில் இருந்து தினமும் 15 லோடு வரை லாரியில் ஈரோடு மார்க்கெட்டுக்கு வரத்தாகிறது. இங்கிருந்து நகரங்களில் முக்கிய பகுதிகளில் மினிடோர் மூலம் சப்ளையாகிறது. சென்ற மாதம் 25 ரூபாய் வரை விற்றோம். தற்போது மூன்றரை கிலோ எடை கொண்ட காளிஃப்ளவர் பூ ஒன்று 15 ரூபாய்க்கும், இதர பூக்கள் 10 ரூபாய்க்கும், மிகச்சிறிய பூ 15 ரூபாய்க்கு இரண்டு விற்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**வெற்றிலை வேர்அழுகலை கட்டுப்படுத்தவழிமுறை: தோட்டக்கலை அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,02:13 IST

லாலாப்பேட்டை: "வெற்றிலையில் ஏற்படும் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்' என கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறியுள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: ஸ்ட் ரெப்போசளின் மருந்தை ஒரு லிட்டர் போர்டோக் கலவைக்கு 0.5

கிராம் என்ற அளவில் கலந்து, வெற்றிலை விதை கொடிகளை நனைக்க வேண்டும். நோயின் பூசன வித்துக்கள், நோய் தாக்கிய கொடிகளிலும் இலைகளிலும் நிறைந்துள்ளதால், இதன் மூலம் பூசன வித்துக்கள் பரவ ஏதுவாக உள்ளது. எனவே, நோய் தாக்கிய கொடிகளை உடனே அப்புறப்படுத்தி எரித்துவிட வேண்டும். இதனால் மற்ற கொடிகளுக் கு நோய் பரவுவதை தடுக்கலாம்.

இரண்டரை கிராம் மயில் துத்தத்தையும், இரண்டரை கிராம் நீர்த்த சுண்ணாம்பையும் தனித்தனியாக அரை லிட்டர் நீரில் கரை க்க வேண்டும். முதலில் அரை லிட்டர் மயில் துத்தக்கரைசலை அரை லிட்டர் சுண்ணாம்பு கரைசலில் கலந்து உடனே பயன்படுத்த வேண்டும். கலவை தயார் செய்ய மண்பாண்டம், பிளாஸ்டிக் பாத்திரங்களையே பயன்படுத்த வேண்டும். கலவை சரியா ன அளவில் இருக்கிறதா? என்று அறிய ஒரு பளபளப்பான கத்தி யை சிறிது நேரம் கலவையில் நனைத்து எடுத்தால், துரு கத்தியில் படியாது இருக்க வேண்டும். துருபடிந்திருந்தால்சுண்ணா ம்பு கரைசலை கலவையில் ஊற் றி சரி செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் வெற்றிலை கொடியில் ஏற்படும் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்.

**நெல்சாகுபடியில் அதிக மகசூல் வேணுமா?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,01:25 IST

புதுக்கோட்டை: நெல் சாகுபடியில் அதிக மகசூல், கறவை மாடுகள் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறை குறித்து இலவச பயிற்சிபெற விரும்பும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் வம்பன் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தை நேரில் தொடர்புகொள்ளலாம்.புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர் வகைகளில் நெல் முதலிடம் வகிக்கிறது. மாவட்டம் முழுவதும் கிட்டத்தட்ட 90 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.
இருந்தும் இதன் உற்பத்தித் திறன்(மகசூல்) மிகவும் குறைவாக உள்ளதால் நெல் சாகுபடியில் விவசாயிகள் தொடர்ந்து பொருளாதார இழப்புக்கு உள்ளாகி வருகின்றனர். புதிய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை பின்பற்றுதல் மற்றும் வீரிய ரக நெல் ஒட்டு விதைகளை பயன்படுத்துவதன் மூலம் மகசூலை பல மடங்கு அதிகரிக்க முடியும் என்பதை வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் உறுதிசெய்துள்ளது.இதில், வீரிய ரக நெல் விதைகள் விவசாயிகளுக்கு கிடைப்பது அரிதாக உள்ளதால் இதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை வம்பன் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் துவக்கியுள்ளது.

விவசாயிகள் சிலருக்கு வீரிய ரக நெல் விதைகளை வழங்கி சாகுபடி செய்வதன் மூலம் இதன்

உற்பத்தியை அதிகரித்து இதர விவசாயிகளுக்கு வழங்கவும் முடிவு செய்துள்ளது. இதற்கான வழிமுறைகள் குறித்து வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு வரும் 13ம் தேதி இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது.இதுபோன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை அறிமுகப்படுத்தியுள்ள நுண்ணூட்டச் சத்துக்கலவைய கறவை மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் துவக்கப்பட்டுள்ளது.விவசாயிகள் வளர்த்துவரும் கறவை மாடுகளின் உடலியக்கத்தை கால்நடை டாக்டர்கள் மூலம் பரிசோதனை செய்து பற்றாக்குறையாக உள்ள நுண்ணூட்டங்களை கண்டறிந்து அவற்றை கறவை மாடுகளுக்கு கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.கால்நடைக்குத் தேவையான நுண்ணூட்டச்சத்து கலவை கொடுப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் செரிமான சக்தி அதிகரிக்கவும், உடல் வலிமையடையவும் வாய்ப்பாக அமையும்.

கால்சியம், பாஸ்பரஸ், மக்னீசியம், துத்தநாகம், இரும்பு, அயோடின் ஆகிய சத்துகள் அடங்கிய தாது உப்பு கலவை கறவை மாடுகளுக்கு நாள்தோறும் குறிப்பிட்ட அளவு கொடுப்பதன் மூலம் அவைகளுக்கு பால்சுரக்கும் திறன் மற்றும் சினை பிடிக்கும் திறன் அதிகரிக்கிறது. இதன் மூலம் சீரான இடைவெளியில் மாடுகள் சினை பிடிக்கவும், அதிக பால்சுரக்கவும் வழிவகுக்கிறது.கறவை மாடுக்கான நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய தாது உப்பு கலவையை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவும், கறவை மாடுகள் வளர்ப்போர் பின்பற்றவேண்டிய புதிய தொழில்நுட்பம் குறித்தும் விவசாயிகளுக்கு வரும் 14ம் தேதி பயிற்சி அளிக்கப்படுகிறது.
எனவே, நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் கறவை மாடுகள் வளர்ப்போர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்த இலவச பயிற்சிபெற விரும்பும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் திருவரங்குளம் அருகில் உள்ள வம்பன் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தை நேரில் தொடர்புகொண்டு தங்கள் பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**வரத்து அதிகரிப்பால் வஞ்சிரம் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,02:10 IST

திருப்பூர் : வரத்து அதிகரித்துள்ளதால், நெய்தல் அங்காடியில் வஞ்சிரம் மீன் விலை ஒரே நாளில் கிலோவுக்கு 160 ரூபாய் சரிந்துள்ளது.திருப்பூர் நெய்தல் அங்காடிக்கு தூத்துக்குடி, ராமேஸ்வரம், கன்னியாகுமரி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் இருந்து கடல் மீன் விற்பனைக்கு வருகிறது. மீன் பிடிக்க தடை நீக்கப்பட்டதையடுத்து, நெய்தல் அங்காடிக்கு தற்போது வஞ்சிரம் மீன் வரத்து

அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்துள்ள நிலையில், நுகர்வு குறைந்துள்ளதால் வஞ்சிரம் மீன் கிலோவுக்கு நேற்று 160 ரூபாய் விலை சரிந்தது. ஒரு கிலோ ரூ.400 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கிழங்கான் மீன் ரூ.100; அயிலை 125; இறால் 350; சங்கரா மீன் 170 ரூபாய் என நெய்தல் அங்காடியில் நேற்று விற்கப்பட்டது.

மீன் விற்பனை அதிகாரிகள் கூறியதாவது: கடல் மீன்களில் மற்ற மீன்களைவிட, அதிக சதை பற்றுள்ளதால் வஞ்சிரம் மீனுக்கு எல்லா பகுதிகளிலும் கிராக்கி உள்ளது. கடலில் இருந்து துறைமுகத்துக்கு கொண்டு வரும்போதே வஞ்சிரம்
மீன் விற்று தீர்ந்துவிடும். தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தற்போது வஞ்சிரம் மீன் அதிகளவு கிடைக்கத்துவங்கியுள்ளன.நெய்தல் அங்காடிக்கு 500 முதல் 700 கிலோ வரை வரத்துள்ளது. அதிகளவு வரத்துள்ள நிலையில், மீன் நுகர்வு குறைந்துள்ளதால் கிலோவுக்கு 160 ரூபாய் வரை விலை சரிந்துள்ளது, என்றனர்.

## 1.50 லட்சம் டன் வெங்காயம் இருப்பு: மழைகாலத்தில் விற்க முடிவு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,02:06 IST

காங்கயம் : வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளதையடுத்து மார்க்கெட்டில் விலை குறைந்துள்ளது. இதன் காரணமாக, மழைகாலத்தில் நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் காங்கயம் பகுதி விவசாயிகள் இருப்பு வைத்து வருகின்றனர். காங்கயத்தில் தற்போது ஒன்றரை டன்னுக்கு மேல் வெங்காயம் தேக்கம் அடைந்துள்ளது. காங்கயம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. மஞ்சளுக்கு ஊடுபயிராகவும், தனியாகவும் காங்கயத்தில் சின்ன வெங்காயம் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. ஆறு மாதத்துக்கு முன், காங்கயம் அருகே அகஸ்திலிங்கம்பாளையம், பொத்திபாளையம், ராசபாளையம், அவினாசிபாளையம், சம்பந்தம்பாளையம், காரபாளையம், காடையூர், சின்னாய்புதூர், செங்கோடம்பாளையம், நத்தக்காடையூர் சுற்றுப்பகுதிகளில் விவசாயிகள், சின்ன வெங்காயத்தை சாகுபடி செய்தனர்.

விவசாயிகள் அறுவடையை துவங்கியதும், மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்து விட்டது. வியாபாரிகள் ஒரு கிலோ வெங்காயத்துக்கு 10 முதல் 13 ரூபாய் வரை மட்டுமே விவசாயிகளுக்கு கொடுக் கின்றனர். விளைச்சல், அறுவடை செலவுகளை கணக்கிடும்போது நஷ்டம் ஏற்படுவதால், அறுவடை செய்த வெங்காயத்தை வயல் வரப்பிலேயே தேக்கி வைத்துள்ளனர். காங்கயம் பகுதிகளில் தற்போது 1.5 லட்சம் டன்னுக்கு மேல் சின்ன

வெங்காயம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மழைகாலத்தில், விலை உயர வாய்ப்புள்ளதால், அதுவரை தேக்கிவைப்பது என முடிவு செய்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: மஞ்சளுக்கு ஊடுபயிராக சின்ன வெங்காயம் சாகுபடி செய்கிறோம். மஞ்சளில் கிழங்கு அதிகம் பிடிப்பதற்காக ஆறுமுறை உழவு ஓட்ட வேண்டியள்ளது. மூன்று மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் சின்ன வெங்காயத்தை மஞ்சளுடன் ஊடுபயிராக நடவு செய்வதன் மூலம், மஞ்சள் அறுவடைக்கு முன்னரே வருவாய் கிடைத்து விடும். ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை சின்னவெங்காயம் நடவுக்கு செலவிட வேண்டியுள்ளது; ஏக்கருக்கு நான்கு முதல் எட்டு கிலோ வரை வெங்காயம் விளைகிறது. ஆறு மாதத்துக்கு முன் விலை குறைந்துள்ளதால், நல்ல விலையை எதிர்பார்த்து சின்ன வெங்காயத்தை தேக்கி வைத்துள்ளோம். புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் பருவமழை பெய்யும்போது, சின்ன வெங்காயம் விலை உயரும் என்ற நம்பிக்கை உள்ளது, என்றனர்.

**பொட்டாஷ் உரம் தட்டுப்பாடு: மரவள்ளி, மஞ்சள் மகசூல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:25 IST

சிறுபாக்கம் : பொட்டாஷ் உரம் தட்டுப்பாட்டினால் மரவள்ளி, மஞ்சள் மகசூல் பாதிப்படைந்துள்ளது. மங்களூர், நல்லூர் ஒன்றியங்களைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் தங்களின் நீர்ப்பாசன நிலங்களில் நீண்டகாலப் பயிரான மரவள்ளி, மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பயிர்களை பயிரிடுவது வழக்கம். கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் விவசாயிகள் குங்கும ரோஸ், வெள்ளை ரோஸ், பர்மா வகை மரவள்ளி பயிர்களையும், கோ 1, எருமக்களி, ஈரோடு 2 உள்ளிட்ட மஞ்சள் ரகப் பயிர்களை அதிகளவில் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் பயிரிட்டனர். தற்போது பருவமழை தொடங்கிவிட்ட நிலையில் இப்பயிர்களுக்கு தேவையான அடிஉரம், மகசூலை பெருக்குவதற்கு பொட்டாஷ் உரமிடுவது வழக்கம். கடந்த ஒன்றரை மாதங்களாகவே பொட்டாஷ் உரம் தனியார் கடைகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி கிடங்குகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் 150 ரூபாய் மதிப்புள்ள பொட்டாஷ் உரம் 600 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 600 ரூபாய் கொடுத்தும் பொட்டாஷ் உரம் கிடைக்காததால் மரவள்ளி, மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு உரமிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இதனால் மகசூல் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதால் பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:19 IST

திட்டக்குடி : ஆவினங்குடி அடுத்த வையங்குடியில் கால்நடைத் துறை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் நடந்தது. ஊராட்சி துணைத் தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். கால்நடை உதவி மருத்துவர்கள் ராமகிருஷ்ணன், மணிகண்டன் சிகிச்சை அளித்தனர். முகாமில் 455 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.மேலும் 700 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கமும், 42 கால்நடைகளுக்கு சினை பரிசோதனையும், 30 மாடுகளுக்கு சினை ஊசியும், 66 கால்நடைகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. ஆதமங்கலத்தில் நடந்த முகாமிற்கு ஊராட்சித் தலைவர் காந்தி தலைமை தாங்கினார். கால்நடை உதவி மருத்துவர்கள் டாக்டர்கள் கமலநாதன், மணிகண்டன் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் 486 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும், 563 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கமும், 38 கால்நடைகளுக்கு சினை பரிசோதனையும், 30 மாடுகளுக்கு சினை ஊசியும், 58 கால்நடைகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

**விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:19 IST

சிறுபாக்கம் : நீர்வழி, நிலவழி திட்ட கோமுகி உபவடி நிலப்பகுதி விவசாயிகள் கலந்துரையாடல் கூட்டம் வேப்பூரில் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) தனவேல் தலைமை தாங்கினார். வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன், உதவி பேராசிரியர் கண்ணன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் முருகன் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் (வணிகம்) அமுதா வரவேற்றார். விவசாயிகளுக்கு விளைந்த விளைபொருட்களை பதப்படுத்துதல், கொள்முதல், விதைகள், விளை பொருட்கள் உற்பத்தியை அதிகரித்தல் உள்ளிட்டவை குறித்து கலந்துரையாடல் நடந் தது. சேமிப்பு கிடங்கு மேலாளர் அண்ணாதுரை, சுகுணா பவுண்ட்ரி பார்ம் மேலாளர் சிவமூர்த்தி, திருச்சி ராலிஸ் திட்ட மேலாளர் வீரமணி, இதயம் நல்லெண்ணெய் மேலாளர் தங்கராசு, மாடர்ன் ரைஸ்மில் பச்சமுத்து, வேளாண் அலுவலர் சித்ரா உட்பட பலர் பேசினர். கூட்டத்தில் விவசாயிகளுக்கு கையேடுகளும், சிறப்பு பரிசும் வழங்கப்பட்டன.

## சம்பா நெல் சாகுபடிக்கு கிராம அளவிலான புதிய பயிர் காப்புறுதி திட்டம் அறிவிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:19 IST

கடலூர் : கடலூர் மாவட்டம் சம்பா பயிருக்கு புதிய திட்டத்தில் இன்சூரன்ஸ் செய்து பயன்பெற வேண்டும் என தனி அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்து மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் மிருணாளினி விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் சம்பா-தாளடி-பிசானம் இரண்டாம் பருவம் சம்பா பயிருக்கு மாற்றியமைக்கப்பட்ட புதிய பயிர் காப்புறுதி திட்டம் கிராம அளவில் நடப்பு ஆண்டில் செயல்படுத்த காப்பீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி கடலூர் மாவட்டத்தில் இரண்டாம் பருவ சம்பா பயிருக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன் தொகை பயிர் காப்பீட்டு திட்டத்தில் கடந்த ஆகஸ்ட்டு முதல் தேதியிலிருந்து நவம்பர் 30ம் தேதி வரை காப்புறுதி செய்துகொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகளுக்கு தக்க ஆவணங்களை கொடுத்து சம்பா நெல் பயிருக்கு ஆகஸ்ட் முதல் தேதி முதல் நவம்பர் 15ம் தேதி வரை காப்புறுதி செய்துகொள்ளலாம். இதற்கான பிரிமியம் விகிதம் வருமாறு: கடன்பெற்ற விவசாயிகள்-மொத்த பிரிமியம்,11.90 சதவீதம், மான்யம்-6.90 சதவீதம், நிகர பிரியம்-5.00 சதவீதம். கடன் பெறாத விவசாயிகளுக்கு இதே பிரியம் விகிதம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி சம்பா பயிருக்கு பயிர் காப்புறுதி செய்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தனி அலுவலரின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:58 IST

செஞ்சி : வல்லம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் மேல்களவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. ஏரிபாசன சங்க தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி கலந்து கொண்டு திருந்திய நெல் சாகுபடியில் நவீன கருவிகளை பயன்படுத்தும் முறை, கூடுதல் மகசூல் பெறும் வழிகள், பார்த்தீனியம் செடி அழிக்கும் முறை குறித்து விளக்கினார். நடப்பு ஆண்டில் அரசின் வேளாண்மை திட்டங்கள் குறித்து பென்னகர் துணை வேளாண்மை அலுவலர் கர்ணன் எடுத்து கூறினார். முகாம் ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மனுவேல், கோபால், மாணிக்கம் செய்திருந்தனர். முன்னோடி விவசாயி பூங்காவனம், விவசாய

தொழிலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் ரவி நன்றி கூறினார்.

**திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:58 IST

செஞ்சி : வல்லம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் மேல்களவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. ஏரிபாசன சங்க தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி கலந்து கொண்டு திருந்திய நெல் சாகுபடியில் நவீன கருவிகளை பயன்படுத்தும் முறை, கூடுதல் மகசூல் பெறும் வழிகள், பார்த்தீனியம் செடி அழிக்கும் முறை குறித்து விளக்கினார். நடப்பு ஆண்டில் அரசின் வேளாண்மை திட்டங்கள் குறித்து பென்னகர் துணை வேளாண்மை அலுவலர் கர்ணன் எடுத்து கூறினார். முகாம் ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மனுவேல், கோபால், மாணிக்கம் செய்திருந்தனர். முன்னோடி விவசாயி பூங்காவனம், விவசாய தொழிலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் ரவி நன்றி கூறினார்.

**திருந்திய நெல் சாகுபடி எஸ்.குளத்தூரில் பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2011,22:50 IST

சங்கராபுரம் : சங்கராபுரம் அடுத்த எஸ்.குளத்தூரில் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். திருந்திய நெல் சாகுபடி முறைகள் மற்றும் அரசின் திட்டங்கள் பற்றி வேளாண்மை உதவி இயக்குனர் ஆனந்தன் விளக் கினார். பார்தீனிய செடியின் தீமைகள், அதனை அழிக்கும் முறை குறித்து வேளாண் அலுவலர் சரவணன் விளக்கினார். முன்னோடி விவசாயிகள் ராஜேந்திரன், சாதிக் பாஷா, மீரான் உட்பட பலர் பேசினர். உதவி வேளாண் அலவலர்கள் மைக்கேல், நாசர், பழனிவேல், சூரிய பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**டீ தூள் கிலோவுக்கு ரூ.3 உயர்வு**

பதிவு செய்த நாள் : 9/12/2011 0:53:41



குன்னூர்: குன்னூரில் உள்ள தனியார் தேயிலை தூள் ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 36வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி கிழமைகளில் நடந்தது. மொத்தம் 11.96 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 8.23 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.73லட்சம் கிலோவும் அடங்கும். வழக்கம் போல் இந்த ஏலத்தில் பாகிஸ்தான், ரஷியா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தகர்கள், உள்நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர். அவர்கள் தரமான தேயிலைத்தூளை போட்டி போட்டு கொள்முதல் செய்தனர். இதனால் 85 சதவீத தேயிலைத்தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ஸி3வரை விலை அதிகம் கிடைத்தது.